# அங்கிகரிக்கப்படுதல்




**"ஆபேலையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கிகரித்தார். காயீனையும் அவன் காணிக்கையையும் அவர் அங்கிகரிக்கவில்லை." ஆதி (4:4,5)**

மேற்க்கண்ட வசனம் ஒன்றை தெளிவாய் கூறுகிறது. ஒரு மனிதன் தேவனால் அங்கிகரிக்கப்படும் பொழுது, அவன் செலுத்தும் காணிக்கை உள்பட அனைத்தும் அவரால் அங்கிகரிக்கப்படுகிறது. ஆனால் அவரால் அங்கிகரிக்கப்படமுடியாத ஒன்றை (காணிக்கை உள்பட) மனிதன் செலுத்தும் பொழுது அவனும் அவரால் அங்கிகரிக்கப்படாமல் போகிறான். இங்கு நாம் அறிந்து கொள்ளும் சத்தியம் என்னவென்றால், காணிக்கையால் தேவ அங்கிகாரத்தை பெற முடியாது, ஆனால் நாம் அங்கிகரிக்கப்பட்டவர்களாய் இருக்க விரும்பினால், நம்முடைய அனைத்தும் (காணிக்கை உள்பட) தேவ அங்கிகாரத்தை பெற்றதாய் இருக்க வேண்டும். மேற்க்கண்ட வசனத்தில், ஆபேல் காணிக்கை செலுத்தியதால் அவன் அங்கிகரிக்கப்படவில்லை, ஆனால் அங்கிகரிக்கப்படதக்க காணிக்கையை செலுத்தியதால், அவனும் அவன் காணிக்கையும் தேவ சமூகத்தில் அங்கிகரிக்கப்பட்டது.

**எபி 11:4** கூறுகிறது **"விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான்; அதினாலே அவன் நீதிமானென்று சாட்சி பெற்றான்; அவனுடைய காணிக்கைகளைக் குறித்துத் தேவனே சாட்சி கொடுத்தார்; அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான்."**, என்று. மேற்க்கண்ட வசனத்தில் விசுவாசத்தினாலே மேன்மையான பலியை தேவனுக்கு செலுத்தியதால் அவனும், அவன் காணிக்கையும் அங்கிகரிக்கப்பட்டது. அதினாலே அவன் நீதிமான் என்று சாட்சி பெற்றான். முக்கியமாக அவனுடைய காணிக்கைகளைக் குறித்தும் தேவன் சாட்சி கொடுத்தார். ஆம் இங்கு எல்லாவற்றிற்கும் காரணமாக இருப்பது விசுவாசம். காயீனும், ஆபேலும் வாழ்ந்த அந்த ஆதி காலத்தில், தேவனுடைய நியாயபிரமாணங்கள் அறிவிக்கபடாத அக்காலத்தில், மனசாட்சியில் உண்மையுள்ளவராய், தன் பெற்றோரான ஆதாமையும், ஏவாளையும் சிருஷ்டித்தவரும், இவ்வுலகம் முழுவதையும் உண்டாக்கி, ஆண்டு நடத்துகிறவரும் தேவனே என்ற அறிவு அவரிடம் இருந்தது. மேலும் தனக்கு உண்டாயிருக்கும் யாவும் தேவனால் கொடுக்கப்பட்டது என்ற நம்பிக்கை அவர்டம் இருந்தது. எனவேதான் **ஆதி 4:4** கூறுகிறபடி **"ஆபேலும் தன் மந்தையின் தலையீற்றுகளிலும் அவைகளில் கொழுமையானவைகளிலும் சிலவற்றைக் கொண்டுவந்தான்."**

ஆனால் அப்படிப்பட்ட எதுவும் காயீனிடம் இருந்ததாக தெரியவில்லை. அவன் மனதில் இருந்ததெல்லாம் பொறாமையும், எரிச்சலும் தான். ஆண்டவரே காயீனை நோக்கி **ஆதி 4:7** வசனத்தில் **"நீ நன்மைசெய்தால் மேன்மை இல்லையோ? நீ நன்மைசெய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும்; அவன் ஆசை உன்னைப் பற்றியிருக்கும், நீ அவனை ஆண்டுகொள்ளுவாய் என்றார்."**, ஆம் காயீனால் காணிக்கை கொண்டு வந்து செலுத்த முடிந்ததே தவிர அவனை தேவனுக்கு செலுத்தமுடியவில்லை. எனவே அவன் தன்னை தேவனுக்கு செலுத்த முடியாத பொழுது அவன் கொடுத்த காணிக்கையும் தேவனால் அங்கிகரிக்கப்படவில்லை. இங்கு நாம் காணகூடிய மற்றொரு சத்தியம், நியாயபிரமாணம் இல்லாத அக்காலத்தில் விசுவாசம் மூலம் நீதிமானாக்கப்பட்டவர் ஆபேல். இன்று நாமும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மீது வைக்கும் விசுவாசத்தால் நீதிமான்களாக்கப்படுகிறோம். அப்படி நீதிமான்களாக்கப்பட்ட நாம், காணிக்கை உள்பட எதை தேவனுக்கு செலுத்தினாலும், ஜாக்கிரதையாய் தேவ அங்கிகரிப்புக்கு ஏற்ற விதமாய் (தலையீற்று, கொழுமை) செலுத்த வேண்டும். நாம் அஜாக்கிரதையாய் இருப்போமானால் அதுவே நம்முடைய வீழ்ச்சிக்கு, பின்மாற்றத்திற்கு காரணமாய் அமைந்து விடும்.

அதே நேரத்தில் காயீனை போல தேவ அங்கிகரிப்புக்கு ஏற்றவிதமாய் நம் வாழ்க்கை இல்லாதபொழுது, நாம் கொடுக்கும் எந்தவித காணிக்கையும் தேவனால் அங்கிகரிக்கப்படுவதில்லை. காணிக்கை மாத்திரமல்ல, தேவனுக்கு என்று நாம் எதை செய்தாலும் அது அங்கிகரிக்கப்படுவதில்லை. தேவனுக்கு ஊழியம் செய்கிறோம் என்று கூறி செயல்படும், பலரது செயல்கள் தேவனால் அங்கிகரிக்கப்படுவதில்லை. சிலர் பெரும் பணத்தை சபைக்கு கொடுப்பதின்

மூலம், ஒருவேளை சபை மக்களிடம் அங்கிகாரம் பெறலாம். ஆனால் அவர்களும் அவர்கள் கொடுத்த பணமும் தேவ அங்கிகாரத்தை பெற்றதா என்பது கேள்விகுறி. அதே போல் சிலர் சபை பொறுப்புக்களில் இருந்து ஊழியம் செய்ய விரும்புகின்றனர். ஆனால் அப்பொறுப்பை பெற அவர்கள் செய்யும் செயல்களும், அப்பொறுப்பை பெற்ற பிறகு அவர்கள் செய்யும் காரியங்களும் தேவனுக்கு எதிரானதாய் உள்ளது. இன்னும், பல கோடிக்கணக்கான மக்களால் அங்கிகரிக்கப்பட்டு, பின்பற்றபடுகிற தேவ ஊழியர்களின் வாழ்க்கையும் உண்மையில் தேவ அங்கிகாரம் அற்றதாய் உள்ளது.

எனவே ஆபேலை போல தேவன் மீது வைக்கும் விசுவாசத்தினாலும், மேலும் அதற்கேற்ற நடக்கையினாலும் நீதிமான் என்கிற அங்கிகரிப்பை பெற்று வாழும் வாழ்க்கையே சிறந்ததாகும். **“அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான்“ (எபி 11:4)** என்று வேத வசனம் கூறுகிறபடி, நாம் மறைந்த பிறகும், நம்முடைய சந்ததியும், நாம் தேவனுக்கென்று செய்த காரியங்களும் தேவ அங்கிரிப்பை பெற்று அநேகருக்கு சாட்சியாய் விளங்கும். தேவன் தாமே அப்படிப்பட்ட கிருபையை நம் ஒவ்வொருவருக்கும் தருவாராக. ஆமென், அல்லேலூயா.